NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 8 May 2019

# ஆய்வு: நாள்பட்ட நோய்களால் அவதியுறும் முதியோர் அதிகரிப்பு

மூன்று அல்லது அதற்கும் மேலான நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்படும் முதியவர்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளில் இருமடங்காகியுள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

'டியுக்-என்யுஎஸ்' மருத்துவப் பள்ளியின் மூப்படையும் ஆராய்ச்சி, கல்வி மையமும் சுகாதார அமைச்சும் இணைந்து நடத்திய ஆய்வில் இது கண்டறியப்பட்டுள்ளது. 4,500க்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் இந்த ஆய்வில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்ததில் 60 வயதுக்கு மேற்பட்ட சிங்கப்பூரர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கை களில் ஈடுபடுவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிய வந்தது. இதற்கிடையே ஆய்வில் பங்கேற்றோரில் 37 விழுக்காட்டினர் தங்களுக்கு மூன்று அல்லது அதற்கு மேலான நாள்பட்ட நோய்கள் இருப்பதாகக் கூறினர். 2009ஆம் ஆண்டில் பங்கேற்றோரில் 19.8 விழுக்காட்டினர் மட்டுமே இவ்வாறு கூறியிருந்தனர். உயர் ரத்த அழுத்தம், உயர் ரத்த கொழுப்பு, மூட்டு வலி, நீரிழிவு, கண்புரை ஆகியவை நாள்பட்ட நோய்கள் பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் உள்ளதென்றும் கூறப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.